## 31 உலவாக் கிழி அருளிய படலம்

குலபூஷணபாண்டியன் சோமவார விரதத்தை விடாது கடைப் பிடித்து பல சிவகாரியங்கள் செய்துவந்தான். இதனால் செருக்குற்று மறையவர்களை மதிக்கமறந்தான். இதன் காரணமாக நாட்டில் மழை வளம் குன்றி பாண்டியநாடு வறுமையில் வாடியது. அந்தணர்களும் மறுமையினால் வேதம் ஓதுதலை மறந்து, வேள்விகளும் செய்யாமல் இருந்தனர். இதனால் மக்கள் கடும் பஞ்சத்தால் வாடினர்.

அரசன் சோம வாரத்தன்று விரதமிருந்து, சோமசுந்தர கடவுளிடம், மக்களின் துன்பம் தன்னை மிகவும் வாட்டுவதாகவும், தனது செல்வங்கள் அனைத்தும் சிவபுண்ணிய வழிகளில் செலவாகி விட்டதாகவும், இந்நிலை போக்க தனக்கு அருளுமாறு வேண்டினான். எம்பெருமானும் அரசனது பிழையை மனத்தில் கொண்டு வாளாய் இருந்தார். அரண்மனைச் சென்ற அரசன் ஐயனையே எண்ணிய வண்ணம் தரையில் படுத்த படி உறங்கி விட்டான்.

ஐயன் அவன் கனவில் சித்தர் வடிவுக் கொண்டு தோன்றி, வேதம் ஓதும் அந்தணர்களை அவன் மதியாமல் மறந்ததால் இந்நிலை ஏற்பட்டது என்பதை உணர்த்தினார். வேதமே சகலமும். அந்தணர்கள் செய்யும் வேள்வியாலும், ஓதும் வேதத்தினாலும் மழை பொழிகிறது. ஆகையினால் அந்தணர்களை ஆதாரிக்குமாறு கூறினர்.

ஐயன் எடுக்க எடுக்க வற்றாது கொடுக்கும் பொன் நிறைந்த ஓர் உலவாக் கிழியை மன்னனிடம் கொடுத்து, அதனைக் கொண்டு நாட்டின் வறுமையை நீக்கிக் கொள்ளுமாறு கூறி மறைந்தார்.

கண்ட கனவு நனவானதைக் கண்ட அரசன் மகிழ்ந்து, உலவாக் கிழியை மந்திரிகளிடம் காட்டினான். அதனை பூஜித்து, அதனின்று பொன்னை அந்தணர்களுக்கும் , மக்களுக்கும் வாரி வாரி அளித்தான். அப்பொன்னைக் கொண்டு கோயில் பணிகளும் செய்தான். பாண்டிய நாட்டு மக்கள் வறுமையின்றி இனிதே வாழ்ந்தனர். அதனைக்கண்டு குலபூஹணபாண்டியனும் இன்பமுடன் பல காலம் மகிழ்ச்சியுடன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான்.

**பல்லவி**

மறையோதும் மறையவர்களை மன்னன் மறைந்ததால்
மழையின்றி வறுமையில் தவித்தனர் மதுரை மக்கள்

**அனுபல்லவி**

குறை தீர்க்க வேண்டி உன்னிடம் வந்த
குலபூஷணன் கனவில் தோன்றி விளக்கினாய்

**சரணம்**
பொன்னும் பொருளும் தந்து பார்ப்பனர்களைக் கொண்டு
வேதம் ஓதி மழை பெய்தால் வறுமை நீங்கிடும் என்றாய்
பொன்னைப் பெற்றிட ஓர் பொற்கிழியும் வற்றாத் தாய்
தந்தவன் இன்னலைத் தீர்த்து வைத்தாயே